# MADURAI DISTRICT TINY & SMALL SCALE INDUSTRIES ASSOCIATION

1A/4A, Dr. Ambedkar Road, Madurai - 625 020.
Ph : 0452 - 2523966, 2523967 Email : info@maditssia.com | Web : www.maditssia.com


தேதி : **01-09-2025**

பெறுநர் : **உறுப்பினர்கள்**

## தேர்தல் அதிகாரியின் அறிவிப்பு

சென்ற **25-8-2025** அன்று நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் **2025-27-**ஆம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர் தேர்தலையும், சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தலையும் சங்க விதிகட்குட்பட்டு நல்ல முறையில் நடத்தி தரும் பொருட்டு முன்னாள் தலைவர்கள், முனைவர் A.செல்வராஜ் அவர்களை தேர்தல் அதிகாரியாகவும், உதவியாளராக திரு.எம்.எஸ்.சம்பத் அவர்களையும் நியமித்துள்ளார்கள் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். **2025-27-**ம் ஆண்டிற்கான தேர்தல் கால அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் தேர்தலை சுமூகமாகவும், சிறப்பாகவும் நடத்த ஒத்துழைப்பு தருமாறு வேண்டுகிறேன்.

டாக்டர் **A. செல்வராஜ்**
தேர்தல் அதிகாரி

## தேர்தல் கால அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான ஆரம்ப நாள் | 08-09-2025 | திங்கள் | காலை **10.00** மணி |
| வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | 13-09-2025 | சனிக்கிழமை | மாலை **7.00** மணி |
| வேட்பு மனுக்களை பரிசீலனை செய்ய கடைசி நாள் | 16-09-2025 | செவ்வாய் | மாலை **5.00** மணி |
| தேர்தலில் போட்டியிட தகுதியுள்ள வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு (மடீட்சியா நோட்டீஸ் போர்டு) | 17-09-2025 | புதன் | மாலை **3.00** மணி |
| வேட்பு மனுக்கள் வாபஸ் பெற கடைசி நாள் | 19-09-2025 | வெள்ளி | மாலை **5.00** மணி |
| செயற்குழு உறுப்பினர் தேர்தல் இறுதி வேட்பாளர் பட்டியல் மடீட்சியா நோட்டீஸ் போர்டில் வெளியீடு | 20-09-2025 | சனிக்கிழமை | காலை **11.00** மணி |
| வருடாந்திர பொதுக்குழு கூட்டம் / செயற்குழு உறுப்பினர்கள் / சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தல் | 25-09-2025 | வியாழன் | காலை **10.30** மணிக்கு நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தை தொடர்ந்து செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு தேர்தல் நடைபெறும். |

# செயற்குழு தேர்தல் விதிகள்

சங்க விதி 25-ன் படி தேவையான செயற்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை **50.** இதற்கு அதிகமாக வேட்புமனு தாக்கலாகி இருந்தால் தேர்தல் கால அட்டவணைப்படி **25-09-2025** அன்று காலை **10.30** மணிக்கு மடீட்சியா அரங்கில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தை தொடர்ந்து செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு தேர்தல் மறைமுக ஓட்டுப்பதிவு முறைப்படி நடைபெறும். தேவையான அளவோ அல்லது அதற்கு குறைவான எண்ணிக்கையிலோ வேட்பு மனுக்கள் தாக்கலாகி இருந்தால் வேட்பு மனுக்கள் திரும்ப பெறுவதற்கான காலக்கெடு முடிந்தவுடன் தகுதியுள்ள வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள் அனைவரும் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்கள். செயற்குழு உறுப்பினர் பதவிக்குரிய தகுதி மற்றும் தேர்தல் விதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. **(Annexure -1)**

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தேர்தல் கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி **25-09-2025** (வியாழக்கிழமை) அன்று ஒன்று கூடி தங்களுக்குள் தகுதி பெற்ற உறுப்பினர்களில் **6** சங்க நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி தகுதியுள்ள ஒருவரின் பெயரை எழுத்து மூலமாக ஒருவர் முன்மொழியவும், மற்றொருவர் வழிமொழியவும் செய்ய வேண்டும். ஒரே பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் முன்மொழியப்பட்டால் தேர்தல் அதிகாரி வாக்கெடுப்பு மூலம் தேர்தல் நடத்துவார்கள்.

வேட்பு மனு வாங்குவதற்கு முன்பாக தங்கள் நிறுவனத்தின் பெயரில் உள்ள இதர பாக்கி தொகைகள் முழுவதையும் செலுத்தி விட வேண்டும். **08-09-2025** காலை **10.00** மணிமுதல் வேட்புமனுக் கட்டணம் ரூ. **5,000 /-** மற்றும் ஜிஎஸ்டி ரூ. **900/-** உட்பட ரூ. **5,900/-**த்தை

1) "மடீட்சியா" வங்கி கணக்கில் **NEFT-RTGS / IMPS** ஆகவோ

2) மடீட்சியா பெயரில் டிமாண்ட் டிராப்டாகவோ

3) தேர்தல் அலுவலகத்தில் நேரில் வந்து **G-Pay QR Code** மூலமாகவோ பணத்தை செலுத்தி வேட்பு மனுவை பெற்றுக் கொள்ளலாம்.

**Bank Details :**

**MADITSSIA, SB A/c No. 67200589034, State Bank of India, Vinayaga Nagar Branch, IFSC : SBIN0001479**

பூர்த்தி செய்யப்பட்ட வேட்பு மனுவை தேர்தல் அலுவலகத்தில் தாக்கல் செய்ய வேண்டும். வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் **13-09-2025** மாலை **7.00** மணி

முனைவர் **A. செல்வராஜ்**
தேர்தல் அதிகாரி

இணைப்பு : **ANNEXURE-1**

## Annexure - 1

# சங்க துணை விதிகளின் ஒரு பகுதி

### செயற்குழு விதி பிரிவு 24

**24(a)** செயற்குழுவில், தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அனைத்து முன்னாள் தலைவர்களும், பொதுக்குழு கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட **50** உறுப்பினர்களும் அடங்கும்.
**24(b)** புதிய செயற்குழு பொறுப்பேற்கும் வரை நடைமுறையில் உள்ள செயற்குழு அதிகாரத்தில் இருக்கும்.

**24(c)**செயற்குழு உறுப்பினர் பதவி ஏதேனும் காரணமாக காலியிடங்கள் ஏற்பட்டால், தேவைப்பட்டால் அந்த இடம் செயற்குழு ஒப்புதலுடன் நிறைவேற்றப்படலாம்.

### செயற்குழு உறுப்பினர் - தகுதி (விதி பிரிவு 25)

**25(a)** செயற்குழு உறுப்பினர் பதவிக்கு போட்டியிடும் உறுப்பினர் நிறுவனத்தின் ஜி.எஸ்.டி. செயல்பாட்டில் இருக்க வேண்டும். தேர்தல் நோக்கத்திற்காக வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி தேதியில் இருபத்தி நான்கு மாதங்களுக்குக் குறையாமல் தொடர்ந்து சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினராக / வருடாந்திர உறுப்பினராக இருக்கும் எவரும் **25(b,c)** நிபந்தனைக்கு உட்பட்டு செயற்குழு உறுப்பினர் பதவிக்கு தகுதியுடையவர் ஆவார்.

**25(b)** உறுப்பினர் ஜுன் 30-ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக சங்கத்திற்கான சந்தாவை செலுத்தியிருக்க வேண்டும் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்யப்படும் தேதியில் செலுத்த வேண்டிய மற்ற அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்தியிருக்க வேண்டும். தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்படும் தேதியில் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய எந்த நிலுவைத் தொகையும் இருக்கக் கூடாது.

**25(c)**சங்கத்தின் செயற்குழுவிற்கு தொடர்ச்சியாக போட்டியிட விரும்பும் ஒவ்வொரு நிர்வாகக்குழு உறுப்பினரும், தற்போதைய பதவிக் காலத்தில் சங்கத்தின் செயற்குழு கூட்டங்களில் குறைந்தபட்சம் **60%** கலந்து கொண்டிருந்தால் மட்டுமே தொடர்ச்சியான தேர்தலுக்கு தகுதி பெறுவார்கள்.

### நிர்வாகக்குழு உறுப்பினர் - தகுதி (விதி பிரிவு 26)

**26(a)** சங்க நிர்வாகத்திற்குள் நிர்வாகியாக வர விரும்பும் உறுப்பினர் செயற்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருக்க வேண்டும்.

**26(b)** உற்பத்தி நடவடிக்கை கொண்ட ஜி.எஸ்.டி. செயல்பாட்டில் இருக்கும் செயற்குழு உறுப்பினர்கள் (உற்பத்தியாளர்கள்) மட்டுமே சங்க நிர்வாகக்குழு தேர்தலில் போட்டியிட தகுதியுடையவர்கள்.

**26(c)**தொடர்ந்து இரண்டு முறை செயற்குழுவில் உறுப்பினராக பணியாற்றியிருக்க வேண்டும். தகுதியான செயற்குழு உறுப்பினர் இல்லாத பட்சத்தில் செயற்குழுவால் பரிந்துரைக்கப்படும் உறுப்பினர் சங்க நிர்வாகிகள் பதவிக்கு போட்டியிடலாம்.

**26(d)** தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கான தகுதி குறைந்தபட்சம் இரண்டு முறை சங்க நிர்வாகியாக பணியாற்றியிருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவில் தலைவர் பதவிக்கு தகுதியான வேட்பாளர்கள் இல்லாத பட்சத்தில், ஒரு முறை சங்க நிர்வாகியாக பணியாற்றிய உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார். அவ்வாறு இல்லாத பட்சத்தில், இரண்டு முறைக்கு மேல் செயற்குழுவில் பணியாற்றிய செயற்குழு உறுப்பினர் இந்த பதவிக்கு போட்டியிட தகுதியுடையவர்.

## தேர்தல் அதிகாரியின் அறிவிப்பு

மடீட்சியா சங்கத்தின் செயற்குழு தேர்தல் **25-09-2025** அன்று **மடீட்சியா ஹாலில்** நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே **01-09-2025** முதல் மடீட்சியா அலுவலகத்தில் தேர்தல் நடைமுறைகள் அமலுக்கு வந்துள்ளது.

## தேர்தல் விதி நடைமுறைகள்

❖ செயற்குழு தேர்தல் உதவியாளராக மடீட்சியா கண்காட்சி மேலாளர் திரு. **எம். ராமசாமி** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

❖ **08-09-2025** அன்று காலை **10.00** மணி முதல் அலுவலகத்தில் தேர்தல் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி வேட்பு மனுவை ரூ. **5000/-** மற்றும் சேவை கட்டணம் ரூ. **900/-** சேர்த்து ரூ. **5900/-**த்தை

1) "மடீட்சியா" வங்கி கணக்கில் **NEFT-RTGS / IMPS** ஆகவோ

2) மடீட்சியா பெயரில் டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது

3) தேர்தல் அலுவலகத்தில் நேரில் வந்து **G-Pay QR Code** மூலமாகவோ பணத்தை செலுத்தி வேட்பு மனுவை பெற்றுக் கொள்ளலாம். வேட்பு மனுக்களை அலுவலக நேரமான காலை **10.00** மணி முதல் இரவு **7.00** மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**Bank Details :**

**MADITSSIA, SB A/c No. 67200589034, State Bank of India, Vinayaga Nagar Branch, IFSC : SBIN0001479**

❖ வேட்பு மனு கட்டணம், இதர பாக்கி தொகை ஆகியவற்றை தேர்தல் அதிகாரியிடம் செலுத்தி உரிய இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்தல் அதிகாரி கையொப்பமிட்ட வேட்பு மனு மட்டுமே செல்லுபடியாகும்.

❖ பூர்த்தி செய்த வேட்பு மனுவை **13-09-2025** மாலை **7.00** மணிக்குள் தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்து வேட்பு மனு பெற்றுக் கொண்டதற்கான இரசீதை தேர்தல் உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

❖ **01-09-2025** முதல் தேர்தல் விதி கடைபிடிக்கப்படுவதால் சங்கம். **BIC** அலுவலகம், **Club** வளாகம், சங்க கூட்ட அரங்கிலோ உறுப்பினர்கள் குழுவாக இருந்து கலந்துரையாடுவது தடை விதிக்கப்பட்டுள்ளது.

❖ **01-09-2025** முதல் சங்க நிகழ்ச்சிகள், கூட்டங்கள் நடத்துவது தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசுதுறை சம்பந்தப்பட்ட ஏதேனும் முக்கிய நிகழ்ச்சி நடத்த வேண்டியிருந்தால் தேர்தல் அதிகாரியின் அனுமதி பெற்று நடத்தலாம்.

❖ தேர்தல் சம்பந்தமான அனைத்து தகவல்களையும் தேர்தல் அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

❖ தேர்தலுக்கு தகுதியான வாக்காளர் பட்டியல் வேண்டுவோர் ரூ. **500/-** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

❖ உறுப்பினர் தகுதி, பாக்கி விபரங்கள், கணக்கு பட்டியல் ஆகிய விபரங்கள் தேவைப்படும் பட்சத்தில் செயலருக்கு கடிதம் கொடுத்து விபரம் பெற்றுக் கொள்ளலாம். அலுவலக ஊழியர்களிடம் எந்தவித விபரமும் கேட்கக்கூடாது.

தேர்தல் விதி நடைமுறைகளை உறுப்பினர்கள் அனைவரும் கடைபிடித்து ஒத்துழைப்பு நல்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

டாக்டர் **A. செல்வ்ராஜ்**
தேர்தல் அதிகாரி